

# தொல்குடித் திட்டம்!

## விளிம்புநிலை மக்களுக்கு அரசின் கரிசனம்!

**திராவிட மாடல் அரசு**

102

**பன்னீர் பெருமாள்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற இலக்குடன் செயல்படும், நம் திராவிட மாடல் அரசு, பழங்குடி மக்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலைகளை முன்னேற்றுவதற்கான தொலை நோக்குடன் உருவாக்கிய திட்டம்தான் ‘தொல்குடித் திட்டம்’.

பொதுச் சமூகத்தில் இருந்து விலகி, சமூக அடுக்கில் கடைநிலையில் வாழும் பழங்குடி மக்களின் வாழ்விடத் தேவைகளான வீடு, சாலை வசதி, குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள் ஆகியவற்றை உருவாக்கிக் கொடுப்பதும், கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

மேலும் பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்கான தரவுகளைப் பெற ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், ஆண்டிற்கு ரூபாய் 250 கோடி வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ.1,000 கோடி ஒதுக்கப்படும் என்றும், நம் முதலமைச்சர் அவர்கள் 2024-2025 -ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்.

### குடியிருப்புகளை மேம்படுத்துதல்

தொல்குடித் திட்டத்தின் கீழ் சுமார் ரூபாய் 40.33 கோடி மதிப்பீட்டில் 750 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக இத்திட்டத்தின் மூலம் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சியுடன் இணைந்து வீடற்ற பழங்குடியினருக்காக 3,594 வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பழங்குடியினர் குடியிருப்புகளைத் தன்னிறைவு பெற்ற குடியிருப்புகளாக மாற்றிட, 26 மாவட்டங்களில் ரூபாய் 62.22 கோடி மதிப்பீட்டில் 560 உள்கட்டமைப்பிற்கான மேம்பாட்டுப் பணிகளை, ‘திராவிட மாடல் அரசு’ செய்து வருகிறது.

### சுகாதாரம்

மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, மலைக் கிராமங்களில் வாழும் பழங்குடியின மக்களுக்கு மருத்துவம் மற்றும் அவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக அவர்கள் வாழும் கிராமங்களை இணைக்கும் வகையில், 8 மாவட்டங்களில் சுமார் 26 அணுகு சாலைகள் ரூபாய் 51.47 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீபெரும்புதூர், நீலகிரி, கோவை, ஈரோடு, தேனி, திண்டுக்கல் (கொடைக்கானல்) மாவட்டங்களில் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் முகாமினை நடத்தினோம். அதிகமான பெண்கள் கலந்துகொண்ட இந்த முகாம் மூலமாக 207 பேர் தேர்வு செய்யப்பட்டு, இறுதியாகச் சோளகர் பழங்குடியினர் 11 பேர், ஊராளிப் பழங்குடியினர் 4 பேர், காணிப் பழங்குடியினர் 2 பேர், பளியர் பழங்குடியினர் 3 பேர் மற்றும் இருளர் 21 பேர், குரும்பர் 3 பேர் என ஒட்டுமொத்தமாக 44 பெண்கள் தேர்வாகினர். தற்போது உதவி செவிலியராகப் பணிபுரிவதற்கான ஒரு வருடப் பயிற்சி வகுப்பு கோத்தகிரியில் உள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியில் வழங்கப்படவுள்ளது.

*-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறைச் செயலாளர் லட்சுமிபிரியா.*

25 ஆயிரம் பழங்குடியின மாணவர்களுக்குச் சிக்கில் ‘செல் அனீமியா’ மற்றும் ‘தாலாசீமியா’ போன்ற மரபணு நோய்களுக்கான ஆரம்ப கட்ட பரிசோதனை (Screening) மேற்கொள்ளப் பட்டு நிறைவடைந்துள்ளது.

### அறிவுத்திறன் வகுப்பறைகள்

பழங்குடியின மாணவர்களின் உண்டு - உறைவிடப் பள்ளிகளை மறுசீரமைத்திட



**கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டுமென்ற விதிகளை உருவாக்கி, தரவுகளை அறிவியல்பூர்வமாகத் தொகுக்கும் பணியில் எதிர்காலத் திட்டமிடலோடு அரசு ஈடுபட்டுள்ளது.**

முதற்கட்டமாகத் திருவண்ணாமலை, தருமபுரி மாவட்டங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளை நவீன முன்மாதிரிப் பள்ளிகளாகவும் , சேலம், கள்ளக்குறிச்சி, திருச்சி, பெரம்பலூர், தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்குத் தேவையின் அடிப்படையில் வாகன வசதி, அறிவுத்திறன் வகுப்பறைகள் போன்றவற்றை நவீன வசதிகளுடன் மேம்படுத்த, ரூபாய் 13 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தபடுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் பழங்குடிச் சமூகங்களைச் சேர்ந்த 1,000 இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு வழங்குவதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, பல்வேறு காரணங்களால் பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வு எழுதி, மேலே படிக்க முடியாத பழங்குடியின மாணவர்களை அடையாளம் காணும் பொருட்டு, பழங்குடியினர் நலனுக்காகப்



பணிபுரியும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன், வீடு வீடாகச் சென்று இளைஞர்களைக் கண்டறியும் திட்டத்தின் முதற்கட்ட பணியானது, திராவிட மாடல் அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது. 146 இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

### செவிலியர் பயிற்சி

பழங்குடியினப் பெண்களுக்கு மருத்துவத் துறையில் வேலைவாய்ப்புகளைப் பெற்று தரும் வகையில், தமிழ்நாட்டில் முதல் முறையாக உதவி செவிலியர் பணி செய்வதற்கான பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

நிகழ்காலத்தில் பழங்குடி மக்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவது மட்டுமல்லாமல், எதிர்காலத்திலும் பழங்குடி மக்களுக்கான திட்டங்களை வகுக்கத் தேவையான தகவல்களைப் பெற்று,மேம்பாட்டுத் திட்டங்களை அறிவியல் பூர்வமாகச் செயல்படுத்த தொலைநோக்குப் பார்வையோடு கூடிய திட்டங்களையும் தொல்குடித் திட்டத்தில் திராவிட மாடல் அரசு உருவாகியுள்ளது.

தொல்குடித் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பழங்குடியினர் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும் 70 மாணவர்களுக்கு, தமிழ்நாடு ஃபெல்லோஷிப் திட்டத்தின் மூலம் கல்வி உதவித்தொகை வழங்க, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் ஆராய்ச்சித் தலைப்புகள் பழங்குடிச் சமூகங்களின் மேம்பாடு, உரிமைகள், கலாச் சாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டுமென்ற விதிகளை உருவாக்கி, தரவுகளை அறிவியல்பூர்வமாகத் தொகுக்கும் பணியில் எதிர்காலத் திட்டமிடலோடு அரசு ஈடுபட்டுள்ளது.

ஆய்வில் ஈடுபடும் இறுதியாண்டு இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு, மாதம் ரூபாய் 10 ஆயிரமும், பி.ஹெச்.டி மற்றும் முதுகலை ஆய்வாளர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மாதம் ரூபாய் 25 ஆயிரமும் உதவித்தொகையாக இத்திட்டத்தின் வழியாக வழங்கத் திட்டமிட்டுள்ளது.

பல்வேறு வழிவகைகள் மூலம் பழங்குடி மக்களின் வாழ்வு மேம்பட திராவிட மாடல் அரசு செயல்பட்டுவருகிறது.

**...சாதனை தொடரும்**

## சமூக நீதியை நிலைநாட்டும் அரசு!



வடமாநிலங்களில் கடந்த 50 ஆண்டுகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக விளங்கியவர், பகுஜன் சமாஜ் கட்சியைத் தோற்றுவித்த கன்சிராம். தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் வழியில் சமூக சமத்துவம் மதச்சார்பின்மை சமூக நீதி, சுயமரியாதை ஆகியவற்றை அழுத்தமாக வலியுறுத்தியவர். இந்தக் கொள்கையைப் பரப்புரை செய்வதற்காக 1988-இல், தந்தை பெரியார் பிறந்த நாளில் குமரியிலிருந்து அரசியல் பிரச்சாரத்தை தொடங்கியவர். 1995-ஆம் ஆண்டு பெரியார் பிறந்த நாளை லக்னோவில் ‘பெரியார் மேளா’ என நடத்திக்காட்டி இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்தவர். இப்படியான சமூக நீதி தலைவரின் மறைவுக்குப் பின், இந்தியாவில் அவரது கனவை வென்ற ஆட்சியாக தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சி உள்ளது என ஒப்பிட்டு எழுதப்பட்ட சிறுநூல் ’கன்சிராமின் கனவை வென்ற திராவிட மாடல்’. த.மு.யாழ் திலீபன் எழுதிய இந்த நூலை திரவிடியன் ஸ்டாக் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

மக்களின் தற்சார்பு வாழ்க்கைக்கான அடித்தளம், கல்வியில் உயர்வு, வெளிநாட்டு உயர்கல்விக்கு உதவி, கடைக்கோடி மக்களுக்கும் நல்வாழ்வு, இல்லம் தேடி கல்வி என பல்வேறு செயல் திட்டங்களால் திராவிட மாடல அரசு பல சாதனைகளை செய்து வருகிறது. பெரியார், அம்பேத்கர் ,அண்ணா வழியில் கலைஞர் வகுத்த பாதையில் சமூக நீதித் தலைவர் கன்சிராமின் கனவையும் நிறைவேற்றிய ஆட்சியாக திராவிட மாடல அரசு திகழ்கிறது என்பதைப் பறைசாற்றுகிறது இந்த சிறு நூல்.

## ::ப்ளாஷ்பேக்



### 32 ஆண்டுகளாக கழகப் பணி!



ஜெ.ஜவஹர்

1993-ஆம் ஆண்டு இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கழக இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, மதுரை மாநகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்ற வருகை தந்தார். அப்போது, நான்,மதுரை மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக, அவர் முன்னிலையில் பேசும் வாய்ப்பு பெற்றேன். மேடையில் கழக மூத்த முன்னோடிகள் சொ.காவேரிமணியம், முன்னாள் மேயர், அக்னிராசு, பெ.குழந்தைவேலு மற்றும் அண்ணன் அன்பில் பொய்யாமொழி, அண்ணன் ‘அன்பகம்’ கலை ஆகியோர் இடம் பெற்றனர். தற்போது தலைமைக் கழகச் சொற்பொழிவாளராக 32 ஆண்டுகளாகத் தொய்வின்றி கழகப் பணியாற்றி வருகின்றேன்.

**– ஜெ.ஜவஹர், தலைமைக் கழகச் சொற்பொழிவாளர், மதுரை மாநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### தி.மு.க. – தி.க. இணைப்புக் கருத்து!

1957 நவம்பர் 26 அரசியல் சட்ட நகல் எரிப்பு போராட்டத்தை அறிவித்த பெரியார் அதற்கு ஒரு நாள் முன்னர் கைது செய்யப்பட்டார். நீதிமன்றம் மூன்று 6 மாத தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்கும்படி தீர்ப்பு கூறியது. பெரியார் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து சட்டமன்றத்தில் பேசினார் பேரறிஞர் அண்ணா. பெரியாரை ஆதரித்துப் பேசியதால் தி.மு.கவும், திகவும் இணைய வாய்ப்பு உள்ளதாக எண்ணம் உருவானது. அப்போது, சென்னை ராயப்பேட்டையில் நடந்த கூட்டம் ஒன்றில் இரண்டு கழகங்களும் இணைவதற்கு வாய்ப்பு இல்லை என்று, அண்ணா தெளிவுபடுத்தினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

712

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131